Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

33ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நிதி: 33 | பாலம்: 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2023

# கனடியத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடு

கனடிய ஜனநாயக அமைப்புகளின்மீது நம்பிக்கையை நிலைநிறுத்துவதற்காக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகக் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ 2023 மார்ச் 06ஆம் திகதி அறிவித்திருந்தார்.

கனடாவில் நடைபெற்ற 2021ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் பிரச்சாரத்தில் கனடாவின் ஜனநாயகத்தைச் சீர்குலைக் கும் அதிநவீன உத்தியை (sophisticated strategy) சீன அரசு கையாண்டதாகக் கடந்த மாதம் குளோப் அண்ட் மெயில் ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. அது சீன இராஜதந்திரிகள் மற்றும் அவர்களது கையாட்களும் சேர்ந்து ஜஸ்ரின் ரூடோவின் லிபரல் கட்சி மீண்டும் ஆட்சி யமைக்கக் கூடிய நடவடிக்கைகளை ஆதரித்திருந்தனர் எனத் தெரிவித்திருந் தது. அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் 2019 மற்றும் 2021ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலுக்கான வாக்களிப்புகளில் சீன அரசு தலையிட்டதா என மத்திய அரசு விசாரணைகள் செய்ய வேண்டும் என வாதிட்டு வந்தன.

கனடியப் பிரதமர் கனடிய மத்திய அரசிற்கான பொதுத் தேர்தல் செயல் முறைகளில் வெளிநாட்டுத் தலையீடுகள் ஏதும் நடைபெற்றதா என ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுக் குழுவை (NSICOP) கேட்டிருந்தார். இக்குழு கனடாவில் நடைபெற்ற 43ஆவது (2019ஆம் ஆண்டு) மற்றும் 44ஆவது (2021ஆம் ஆண்டு) மத்திய அரசிற்கான பொதுத்தேர்தல்களில் ஏற்பட்ட வெளிநாட்டுத் தலையீடு முயற்சிகள், அவற்றால் கனடாவின் ஜனநாயகம் மற்றும் நிறுவனங்களில் ஏற்பட்ட விளைவுகள் என்பன பற்றி விரிவாக ஆராய்ந்து அவர்களின் கண்டு பிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.



Thanks: CBC/The Canadian Press/Sean Kilpatrick

கனடிய நாடாளுமன்றத்திற்குப் புறம்பாக சுதந்திரமாக இயங்கும் கனடாவின் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அமைப்பின் (NSIRA) தற்போதைய தலைவரான Marie Deschampsஐ கனடியப் பிரதமர், 43ஆவது மற்றும் 44ஆவது மத்திய அரசிற்கான பொதுத்தேர்தலின்போது கனடாவின் தேசிய பாதுகாப்பு நிறுவனங்கள் எவ்வாறு வெளிநாட்டுத் தலையீடுகளைக் கையாண்டன என ஆராயுமாறு கேட்டுக்கொண்டார். Marie Deschamps உயர்நீதி மன்றத்தில் பதவி வகித்த நீதிபதிகளில் ஒருவர். அவர் நீதிபதிப் பதவியில் இருந்து 2012ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றவர். 2019ஆம் ஆண்டில் இவர் NSIRA (National Secruity and Intelligence Review Agency)யின் தலைமைப்பதவிக்கு நியமிக் கப்பட்டார். NSIRA ஒரு சுதந்திரமாக இயங்கும் நிறுவனம் என்றபடியால் அது தனது ஆய்வு நோக்கம், ஆய்வு முறைகளைத் தாமாகவே முடிவு செய்யும். அவர்களது கண்டுபிடிப்புகள் நாடாளு மன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இவற்றைவிட கனடியப் பிரதமர் தரம்வாய்ந்த ஒருவரை ஒரு சுதந்திரமான சிறப்பு அறிக்கையாளர் (Independent Special Rapporteur) பதவிக்கு நியமிக்க இருப்பதாகத் தெரிவித்தார். அவர் ஜனநாயகத்தின் மீது கனடியர்களின் நம்பிக்கையை பாதுகாப்பதற்கும், அதை மேம்படுத்துவதற்கும் மத்திய அரசு என்ன செய்ய வேண்டும் என்ற பரிந்துரைகளை வழங்குவதற்கான தகுதியைப் பெறுவார் எனக் கனடியப் பிரதமர் தெரிவித்தார்.

இந்தச் சுதந்திரமான சிறப்பு அறிக்கை யாளர் NSICOP மற்றும் NSIRA நிறுவனங்களின் கண்டுபிடிப்புகளையும் மற்றும் கனடாவின் தேர்தல்கள் ஆணை யாளர் (Canada's Commissioner of Elections) மேற்கொள்ளும் விசாரணை களையும் ஆராய்ந்து பரிந்துரைகளை கனடிய மத்திய அரசிற்கு வழங்குவர். அத்துடன் பொதுமக்களுக்கு அறிக்கையும் வழங்குவர். கனடிய மத்திய அரசாங்கம் இந்தச் சுதந்திரமான சிறப்பு அறிக்கையாளரின் பரிந்துரையை ஏற்று நடவடிக்கைகள் எடுக்கும்.

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தமது அரசு எடுக்கும் இந்த நடவடிக்கைகள் கடந்த இரண்டு மத்திய அரசிற்கான பொதுத்தேர்தல்களில் என்ன நடந்தது என்பதை நன்கு புரிந்துகொள்ள உதவும். வெளிநாட்டு அரசாங்கங்கள் எவ்வாறு கனடிய ஜனநாயகத்தில் தலையிட முயன்றன. கனடாவின் பாதுகாப்பு நிறுவனங்கள் இவ்வாறான அச்சுறுத்தல் களுக்கு எவ்வாறு முகம் கொடுத்துப் பதிலளித்தன. மற்றும் தகவல் எவ்வாறு அரசாங்க நிறுவனங்களுக்கு இடையே

தொடர்ச்சி 04 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

My services are 100% FREE
For First Time Buyers/Buyers/Tenants
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
Call Para
647.296.0596.

FOR ALL YOUR COTTAGE NEEDS
SIVAGE SIVAGUMARAN
416-553-8902
sivagehomes@sivage.ca
www.sivage.ca
RE/MAX

Selling/Leasing/Listing
www.vanyhome.ca/
Life Insurance & Super VISA
www.vjsfinancial.com
Vany Jeganmohan

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Real Estate Broker
416.624.4803
suku07@hotmail.com
www.sukumarhomes.com

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact : 647-290-1022 | 0605bala@gmail.com | visit : www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find your best future home!

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
Re/Max Realtron Realty Inc.





# For All Your Private Mortgage Needs

**8T Capital**

Mortgage Administration # 13073



**AYNGKARAN SIVANANTHAM**

Business Development Manager

Mobile: (647) 670-0320

Email: ayngkaran@8twelve.capital

Website: www.8Twelve.capital

* NOT Income Driven
* NOT Credit Driven
* Equity Based Lender
* Common Sense Lending Approach
* Interest Only Payments
* Flexible Terms
* Commitment issued less than 24 Hours
* Fast Funding within 2 to 3 business days
* 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
* Construction & Contractor Programs
* Flexible & Creative
* No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***




Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# கனடியத்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பரிமாறப்பட்டன என்பவனவற்றை பொது மக்களுக்குத் தெரியப்படுத்தி ஜன நாயகத்தின் மீது கனடியர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்க மத்திய அரசு எடுக்கும் இந்த நடவடிக்கைகள் மக்களுக்கு உதவும் என ஊடகங்களுக்கு கனடியப் பிரதமர் தெரிவித்தார்.

கனடிய மத்திய அரசு வெளிநாட்டுத் தலையீட்டின் அச்சுறுத்தலை எதிர்ப்பதற்காக சில புதிய நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. அவற்றில் சில:

* "வெளிநாட்டுச் செல்வாக்கை வெளிப்படுத்தும் பதிவேடு" ஒன்றை உருவாக்க



பொதுமக்களிடம் இருந்து ஆலோசனை கேட்கப்படும். இப்பதிவேட்டில் ஒரு வெளிநாட்டு அரசாங்கத்தின் சார்பாக வாதிடும் நபர்களுடைய விபரங்கள் பதியப்படும். இதன்மூலம் அவர்களது வெளிப்படைத் தன்மையும், பொறுப்புணர்வும் உறுதிப்படுத்தப்படும். இதன் மூலம் வெளிநாட்டுத் தலையீட்டால் அடிக்கடி இலக்கு வைக்கப்படும் சமூகங்கள் பாதுகாக்கப்படுவது உறுதிப்படுத்தப்படும். இதற்கான ஆலோசனைகளை பொதுமக்களிடமிருந்து மத்திய அரசு மார்ச் 10ஆம் திகதியில் இருந்து கேட்கத் தொடங்குகிறது. இவ்வாறான பதிவேடு அவுஸ்ரேலியாவிலும் உள்ளது.

* வெளிநாட்டுத் தலையீட்டை எதிர்ப்பதற்கான முயற்சிகளை ஒருங்கிணைத்து வழிநடத்த ஒரு வெளிநாட்டுக் குறுக்கீட்டு எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளரை தேசிய அளவில் நியமித்தல்.

* NSICOP இனுடைய பரிந்துரைகளை அடுத்த 30 நாட்களில் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்குதல்.

* தவறான தகவல்களை அடையாளம் கண்டு அவற்றை எதிர்ப்பதற்கான திறனை சமூகங்களுக்கு வழங்கப் பயிற்சியளிக்க $5.5 மில்லியன் நிதி முதலிடப்படும். உண்மையைச் சரிபார்த்து (Fact-Check) தவறான தகவல்களை எதிர்ப்பதற்கு சமூக நிறுவனங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.



புதிய ஜனநாயகக் கட்சித்தலைவர் Jagmeet Singhஉம் கனடியப் பழமைவாதக் கட்சித்தலைவர் Pierre Polievre உம் சேர்ந்து கனடிய மத்திய அரசை கனடியத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடு பற்றி ஆராய வெளிப்படையான பொது விசாரணை ஒன்றைக் நடத்துமாறு வலியுறுத்தினர். அதற்குப் பதிலளித்த கனடியப் பிரதமர் அவ்வாறான ஒரு பொது விசாரணை தேவைப்படின் அதை தாம் நியமிக்கும் சுதந்திரமான சிறப்பு அறிக்கையாளர் தெரிவிப்பார் எனவும், அவரின் பரிந்துரையை மத்திய அரசு ஏற்று நடக்கும் என்றும் கூறினார்.

2021 பொதுத்தேர்தலில் ரொறொன்ரோவில் உள்ள சீனத் தூதரகம், சீன அரசு ஆதரவாளர்கள் பலரை ரொறொன்ரோவில் உள்ள 11 தேர்தல் தொகுதிகளில் தேர்தல் வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பணம் வழங்கி செயல்பட வைத்தது எனக் கனடிய உளவுத் துறை அதிகாரிகள் ஜஸ்ரின் ரூடோவிற்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர் என குளோபல் நியூஸ் செய்தி ஊடகம் கடந்த வருடம் செய்தி வெளியிட்டிருந்தது.

கடந்த கனடியப் பொதுத் தேர்தல்களில் சீன அரசு தலையிட முயற்சித்ததை ஜஸ்ரின் ரூடோவும் கனடாவின் உளவுத் துறை அமைப்பின் தலைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால் இவ்வாறான தலையீட்டால் நாட்டின் தேர்தல் முடிவில் எவ்வாறான மாற்றமும் ஏற்படவில்லை என்று அவர்கள் நம்புகின்றனர்.

"கனடியப் பிரதமரால் தேர்ந்து எடுக்கப்பட்ட "சிறப்பு அறிக்கையாளரின்" விசாரணை உண்மையான, சுயாதீனமான ஒரு பொதுவிசாரணைக்குச் சமமானது அல்ல. நாடாளுமன்றத்தின் விசாரணைச் சட்டமூலத்தால் ஏற்படுத்தப்படும் சுயாதீனமான விசாரணைக்கு இருக்கும் சட்டபூர்வ அதிகாரங்களான சாட்சியத்தைக் கட்டாயப்படுத்தல், ஆவணங்களை ஆராய்தல் போன்றவை சிறப்பு அறிக்கையாளரிற்கு இல்லை" எனப் பழமைவாதக் கட்சியின் தலைவர் Pierre Poilievre ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அவ் அறிக்கையில், "ஜஸ்ரின் ரூடோ தொடர்ந்தும் கனடியர்களிடம் இருந்து உண்மையை மறைக்க முடியாது. நாங்கள், உண்மையை புதைக்க அவரை விட மாட்டோம். லிபரல் கட்சியினர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்திற்கு செவிசாய்த்து சுதந்திரமான ஒரு பொது விசாரணையை நிறுவ வேண்டும்" எனக் குறிப்பிட்டிருந்தது.

பொது விசாரணையில் உளவுத்துறையினரால் எல்லா விபரங்களையும் தெரிவிக்க



Peter Julian

முடியாது. அதனாலேயே அரசு சிறப்பு அறிக்கையாளர் மூலம் விசாரணை நடத்துகிறது. உளவுத் துறையின் விளக்கத்தைப் பழமைவாதக் கட்சித் தலைவரும், அவரது உயர்மட்டக் குழுவும் ஏற்றுக்கொள்ளுமா என ஊடகயிலாளர் ஒருவர் பழமைவாதக் கட்சித்தலைவரிடம் கேட்டகேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் அவ்வாறான விளக்கத்தை தான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். அது ஒரு தந்திரம் மற்றும் ஏமாற்றும் நடவடிக்கை என்றார்.

"என்ன நடந்தது, எவ்வாறு நடந்தது என்பதை பொதுமக்களும் தெரிந்து கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் இது நிகழாமல் எப்படித் தடுக்கலாம் என்று பரிந்துரைக்க வேண்டும். இதனாலேயே நாங்கள் ஒரு பொது விசாரணை வேண்டும் என்று கூறுகிறோம்" எனப் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Jagmeet Singh ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற அவைத் தலைவராக இருக்கும் Peter Julian, மத்திய அரசு சிறப்பு அறிக்கையாளரை விசாரணைக்காக நியமிக்க விரும்பினால் அவர் ஒரு நேர்மையாளராகவும், எவ்வித கட்சி சார்பற்றவராகவும் இருக்க வேண்டும். அவர் லிபரல் அரசிடம் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படக் கூடியவராக இருக்க வேண்டும் என CBC ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கனடியப் பழமைவாதக் கட்சித்தலைவர் கூறிய "கனடியப் பிரதமர் தான் கட்டுப்படுத்தும் ஓர் இரகசிய செயல்முறை மூலம் விசாரணை நடத்துகிறார்" என்ற கருத்திற்கும், கனடியப் பழமைவாதக் கட்சியின் வெளியுறவு விவகாரங்களுக்கான விமர்சகர் Michael Chong கூறிய "இரகசிய விசாரணைகள், இரகசிய சான்றுகள், இரகசிய முடிவுகள் என எல்லாமே பிரதமரால் கட்டுப்படுத்தப்படும் என்ற கருத்திற்கும், பழமைவாதக் கட்சியின் முன்னாள் மேற்சபை உறுப்பினரான Vern White மறுத்துத் தனது



கருத்தை CBC ஊடகத்திற்குத் தெரிவித்துள்ளார்.

Vern White கூறுகையில், "மேற்கூறியவை முற்றுமுழுதாகத் தவறான கருத்துகள். NSICOP என்பது நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மேற்சபை உறுப்பினர்களைக் கொண்ட கட்சி சார்பற்று இயங்கும் குழுவாகும். இக்குழு உறுப்பினர் அதிஉயர் இரகசியங்களை விளக்கமாகப் பெற்று அவற்றை இரகசியமாக வைத்திருக்க உறுதிபூண்டு சத்தியப்பிரமாணம் செய்தவர்கள். இவர்கள் சுதந்திரமாக விசாரணை செய்து இரகசிய அறிக்கையைப் பிரதமருக்குக் கையளிப்பர். அதன்பின்னர் அவ் அறிக்கையில் இரகசியமான பகுதி நீக்கப்பட்டு மிகுதி பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படும். இது மிகவும் தெளிவாக சட்ட மூலத்தில் உள்ளது" என்று CBC ஊடகத்திற்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "தற்போது NSICOP விசாரணையை அரசியல்மயப் படுத்திப் பேசுவது கவலையாக உள்ளது" என்றார்.

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



Mr.S.F.Xavier (Teacher)

# அப்பாவின் கண்ணம்மா




அம்மா ஸ்டூல் ஒன்றை இழுத்துப் போட்டுக்கொண்டு அதன்மேல் ஏறி நின்று எதையோ பரணில் தேடிக்கொண்டிருந்தாள். நான் இதையெல்லாம் கவனிக்காததுபோல பாடத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தேன். கடந்த ஒரு வாரமாய் இந்த வீட்டில் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. அப்பா எழுதிய துண்டுக் காகிதங்கள், பேப்பர்கள் எல்லாவற்றையும் அம்மா கவனமாகச் சேகரித்து கட்டுக் கட்டாக பரண்மேல் குவித்து வைத்திருந்தாள். அதில்தான் எதையோ தேடிக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது.

இப்படித்தான் புதையல் காக்கும் பூதம் போல அவ்வப்போது ஸ்டூல் வைத்து ஏறி நின்று எதையாவது கிண்டி எடுப்பதும் அதைப் படித்துவிட்டு மீண்டும் பத்திரப் படுத்தி கவனமாக வைப்பதும் இப்போது அம்மாவின் தினசரி வேலையாய்ப் போய் விட்டது.

அப்பா எப்போதும்போல சிரித்துக் கொண்டேயிருந்தார். எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு மாதங்கள் விரைவாக ஓடிவிட்டாலும், சுவரில் தொங்கிய அப்பாவின் படம், அப்பா கண்முன்னால் இருப்பது போன்றதொரு பிரமையை எங்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. திடீரென ஒருநாள் நெஞ்சு வலிப்பதாகச் சொன்ன வரை அவசரமாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது, பாதி வழியிலேயே எங்களைத் தவிக்க விட்டு அப்பா போய் விட்டார்.

சொந்த பந்தம் என்று சொல்லிக் கொண்டு வந்தவர்கள் எல்லாம் தாமரை இலையில் தெறித்து விழுந்த நீர்த்துளி போல ஒவ்வொருவராக விடைபெற்றுச் சென்றுவிட நானும் அம்மாவும் தான் வீட்டிலே எஞ்சி நின்றோம். அப்பா இருந்த வரை நினைத்தும் பார்க்காத தனிமையும், எதிர்காலம் பற்றிய பயமும் திடீரென எங்கள் இருவரையும் பிடித்துக் கொண்டது. நாளைய பொழுது என்ன என்ற கேள்வி எங்கள் முன் விருட்சமாய்ப் பரந்து நின்றதில் வியப்பேதுமில்லை!

'எங்களுக்கென்று எதுவும் சேர்த்து வைக்காமல் நிம்மதியாய்ப் போய் விட்டாரேடி பாரதீ..தீ..!' அம்மா என்னைக் கட்டிப் பிடித்துக் கதறியபோது, ஆண்களையே நம்பியிருக்கும் எங்கள் சமுதாய அமைப்பை நினைக்க எனக்குள்ளும் அந்தப் பயம் சட்டென்று பிடித்துக் கொண்டது. பெண்ணாய் பிறந்து விட்டால் எப்பொழுதும் பாரம்தானோ என்று அந்தக் கணத்தில் எண்ணத் தோன்றியது.

பாரதியின் எழுத்துக்களால் கவரப்பட்ட அப்பா, நான் பிறந்தபோது அந்தப் பெயரையே எனக்குச் சூட்டி 'பாரதீ, பாரதீ' என்று ஆசை தீர அடிக்கொரு தடவை அழைத்து, திருப்திப்பட்டுக் கொண்டிருந்தார். அம்மாவின் உண்மையான பெயர் கண்ணம்மா. அம்மா பிளஸ் டு படித்துக் கொண்டிருந்தபோது அவர்களின் பாடசாலையில் நடந்த பாரதி விழா ஒன்றுக்கு இளம் ஆசிரியராக இருந்த அப்பாவையும் சிறப்புச் சொற்பொழிவாற்ற அழைத்திருந்தார்களாம். அங்கே அப்பாவின் பேச்சு வன்மையைக் கண்டு அம்மா வியந்திருக்கிறாள். அதுமட்டுமல்ல, அப்பாவிற்குக் கணீரென்ற நல்ல குரல் வளமும் இருந்தது. அவர் சொற்பொழிவிற்கிடையே 'சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா' என்ற பாரதியின் பாடலை சபையோர் மயங்கும் வண்ணம் மிக அழகாகப்பாடி அதற்கு விலாவாரியாக விளக்கமும் கொடுத்திருக்கிறார்.

சபையோர் மயங்கினார்களோ இல்லையோ அந்தப் பாடலைச் சபையிலே கேட்டுக் கொண்டிருந்த அம்மா தன்னையே கண்ணம்மாவாக நினைத்து ஒரேயடியாய் மெய்மறந்து உருகிப் போய்விட்டாள். அப்பா மீது அவளுக்கு ஒரு வகை ஈர்ப்பு ஏற்பட்டு இருந்ததால் அப்புறம் அடிக்கடி அவர்களின் சந்திப்பும் நிகழ்ந்தது. அவளே விரும்பி பெரியவர்களின் சம்மதத்தோடு அப்பாவை திருமணம் செய்து கொண்டாள். உதடு மெல்ல விரியும் புன்சிரிப்பு, பட்டென்று கவர்ந்திழுக்கும் அந்தக் காந்தக் கண்கள், கணீரென்ற குரல், இவையெல்லாம் அப்பாவின் பிளஸ் பொயின்ட்ஸாக இருந்ததால் அவை எல்லாம் ஒட்டுமொத்தமாக அம்மாவைக் கவர்ந்து இழுத்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லைத்தான்!

கற்பனை வேறு யதார்த்தம் வேறு என்பதைக் காலப்போக்கில் அம்மா புரிந்து கொண்டாள். குடும்ப பொருளாதார நிலையைக் கவனிக்காமல் கற்பனையில் வாழ்வது, சிந்திப்பது, எழுதுவது, சொற்பொழிவாற்றப் போவது, பொதுச்சேவை என்று இப்படியே அவரது வாழ்கை வாத்தியார் தொழிலில் வரும் சொற்ப வருமானத்தை மட்டும் நம்பி தினமும் ஓடிக்கொண்டிருந்தது. அம்மாவிற்கு என்னை எப்படிக் கரைசேர்ப்பது என்ற பயம், அதனாலே தினமும் அப்பாவைத் திட்டித் தீர்த்துக் கொண்டேயிருந்தாள்.

அப்பாவிற்கு ரோஷம் வருமோ என்னவோ தெரியாது, ஆனால் அதற்குப் பதிலாகக் கோபம் மட்டும் வரும். அம்மா திட்டத் தொடங்கியதும் அப்பா கதவை அடித்துச் சாத்திவிட்டு உள்ளே இருந்து கோபம் தீரும்வரை ஏதாவது எழுதிக் கொண்டேயிருப்பார். அப்புறம் அம்மா உள்ளே




போய் சாப்பிட வரும்படி சமாதானப்படுத்துவாள். திட்டுவதும், அப்புறம் சமாதானப் படுத்துவதும் தினமும் நடந்து கொண்டிருந்ததால் எங்க வீட்டிலே அது ஒரு சாதாரண நிகழ்ச்சியாகவே போய்விட்டது. அம்மாவின் ஊடலும் அதைத் தொடர்ந்து அப்பா அம்மாவைச் சமாதானப் படுத்துவதும் தொடரும். அம்மாவின் பலவீனம் என்ன என்பதை அப்பா நன்கு அறிந்து வைத்திருந்தார்.

'வாலைக் குமரியடி- கண்ணம்மா மருவக் காதல் கொண்டேன்..!' சமையல் செய்து கொண்டிருக்கும் அம்மாவின் முதுகுப் பக்கம் சென்று அவளது தோள்பட்டையில் நாடிபுதைத்து காதுக்குள் மெதுவாக அப்பா கிசுகிசுக்க, தேன் குடித்த வண்டு போல அம்மா சமையலையும் மறந்து அப்படியே உறைந்து போவாள். இப்படிப் பல தடவைகள் அப்பாவின் பாடலைக் கேட்டு மெய்மறந்து அவள் உறைந்து போய் நின்றதை நான் பார்த்து எனக்குள் வியந்திருக்கிறேன். அப்பாவைப்போல அம்மாவிற்குத் தனது அன்பை வெளிப் படையாகக் காட்டத் தெரியாதோ என்றும் சில சமயங்களில் நான் நினைப்பதுண்டு. ஆனால் இறுதியில் தணிந்து, பணிந்து போவது எப்பொழுதும் அம்மாவாகத் தானிருக்கும்.

'ஏனம்மா எப்ப பார்த்தாலும் அப்பாவைத் திட்டிக் கொண்டே இருக்கிறாய்?'

'அது என்னோட சுபாவமடி, உன்னையும் தான் தினமும் திட்டிறேன், அதற்காக உன்மேல எனக்கு பாசமில்லை என்று அர்த்தமா?'

அம்மாவின் அப்பாவித்தனமான இந்தப் பதில் என்னைச் சிந்திக்க வைத்தது. எங்கேயாவது இருவரும் வெளியே சென்றால் அம்மாவைப் பார்த்து என்னுடைய அக்காவா என்றுகூட சிலர் கேட்டிருக்கிறார்கள். தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழி என்பதுபோல அம்மா ஒரு நெருங்கிய தோழிபோலத்தான் என்னோடு பழகினாள். அம்மாவின் பாசம் ஆழமானது, வெளியே காட்டிக் கொள்ளாமல் மனசுக்குள் பூட்டிவைக்கும் அன்பு! பொசுக்கென்று வெடித்துவிடும் பலூன் போல, கண்களில் நீர் துளிர்க்கும் போது பளீச்சென்று மின்னலாய்த் தெரியும் அந்த அன்பு!

அப்பா மேல் அம்மாவிற்கு மதிப்பும், மரியாதையும், பாசமும் இருந்தது மட்டுமல்ல அவர்மீது ஒருவித மயக்கமும் இருந்தது. அப்பா என்ன சொன்னாலும், அவர்தான் தனது உலகமென்று தலை யாட்டும் பொம்மைபோல சரியோ பிழையோ அவர் சொல்லைத்தட்டாது நடந்து கொள்வாள். 'அப்பாவின் கண்ணம்மா' என்றுதான் நான் அம்மாவை எப்பொழுதும் செல்லமாக அழைப்பேன். அப்பாவுக்கு ஏதாவது நடந்தால் அதை அம்மாவால் தாங்கிக்கொள்ள முடியுமா என்றுகூட நான் சிலசமயங்களில் நினைத்துப் பார்த்திருக்கிறேன்.

எதிர்பாராத விதமாக நடக்கக் கூடாத சோகசம்பவம் அன்று நடந்து விட்டது. பற்றிப் படர்ந்த மரமே பட்டுப்போனால் பாவம் அந்தக் கொடி என்ன செய்யும்? முதல் ஒரு வாரம் அப்பாவின் படத்திற்கு முன்னால் சுவரோடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டு துக்கம் தாளமுடியாமல் அம்மா அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். அப்புறம் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டாள்.

பிரிவு என்பது உடலுக்குத்தான், ஆத்மாவிற்கு அல்ல என்ற ஆத்மீக தத்துவத்தை அப்பாவிடம் இருந்து அம்மா கற்றுக் கொண்டிருக்கலாம். ஏனோ தெரியாது அதன் பிறகு அம்மா மனதுக்குள் அழுதாளோ, அல்லது இரவு நேரங்களில்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

Sam Surendran
Mortgage Broker
Licence # M16002312
647-922-5704
Mortgage Alliance
Office: 1585 Markham Road, Unit 110, Scarborough ON. M1B 2W1

MORTGAGE OFFICE
GOOD SERVICE . GOOD LENDERS
GOOD RATES
Apply for your mortgage loan today
*Hiring Mortgage Agents, Commission Income
www.OKmortgages.ca

# நாமும் நமது இல்லமும் 627

## கனடிய மத்திய வங்கி வட்டி 4.5%



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

மார்ச் 08, 2023, மத்திய வங்கியின் ஆளுநர் ரிவ் மக்கலம் (Tiff Macklem) தனது வட்டிவீத அறிவிப்பை வெளியிட்டு இருந்தார். கடந்த ஒரு வருட வட்டி வீத அதிகரிப்பு, இந்த வருடம் முதல் தடவையாக மாறாமல் 4.5% ஆகவே விடப்பட்டுள்ளது. எனினும், அவரின் அறிக்கையில் முக்கியமாக வேறு ஒன்றையும் குறிப்பிட்டு இருந்தார். அதாவது கனடியப் பணவீக்கம் (Inflation) குறையாமல் இருந்தால் வட்டி வீதம் மீண்டும் அதிகரிக்கப்படலாம் என்பதாகும். எனினும், இதற்கு மாறாக அமெரிக்க வட்டி வீதம் தொடர்ந்து அதிகரிக்கும் என அமெரிக்கக் கூட்டு வங்கியின் ஆளுநர் ஜெரோம் பவல் (Jerome Powel) தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் (2022)இலிருந்து தொடர்ந்து எட்டு (8) தடவைகள் கனடிய மத்திய வங்கியானது வட்டி வீதத்தை 0.25 இலிருந்து அதிகரித்து வந்துள்ளது. இதனால் ஆதன வியாபாரமும் இறங்க தொடங்கியது. வியாபாரங்களும் கடன் பெறுவதனை குறைக்கத் தொடங்கின. வியாபாரத்திலும், பணவீக்கத்திலும் எதிர் பார்த்த மாதிரி இறக்கத்தைக் காணக் கூடியதாக இருந்தது. எனினும், மத்திய வங்கி, பணவீக்கம் பற்றிய இரு எண்ணங்களில் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

மத்திய வங்கியின் கொள்கை பணவீக்கம் 2% என்பதே. இதனை அடைவதே அவர் களின் நோக்கமாகும். ஆனால் அது இலகுவானதா? வட்டி வீத அதிகரிப்பால் 40 வருடங்களில் அதிக பெறுமானத் திற்குச் சென்றிருந்த பணவீக்கம் 8.1% ஐ அடைந்தது. வட்டி வீத அதிகரிப்பால் பணவீக்கம் இறங்கி வருவதனைக் காணலாம். இது 5,9%ஆகக் குறைந்துள் ளது. 2023இன் நடுப்பகுதியில் மேலும் இறங்கி 3.5%ஆகக் குறையலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. எனினும் கனடிய வட்டி வீதமும், அமெரிக்க வட்டி வீதத்திற்கும் இடையேயான வித்தியாசத் தால், கனடிய டொலரின் பெறுமதி குறைவதனைக் காணலாம். கனடிய ஏற்றுமதிக்குச் சார்பாகவும் இறக்குமதிக்கு எதிராகவும் காணப்படுகின்றது. ஆனால், கனடிய ஆதன வியாபரத்திற்கு இது ஒரு ஸ்திரதன்மையை தற்காலிகமாக ஏற்படுத்தியுள்ளது.

பல அனுபவமிக்க பொருளாதார வல்லுநர் கள் 2% என்ற பணவீக்கப் பெறுமானம் (Inflation Target Rate) மாற்றப்பட வேண்டும். வளர்ச்சியடைந்த பல நாடுகள் 2% என்ற பெறுமதியிலிருந்து 3%இற்கு அதிகரிப்பதே சிறந்தது எனக் குரல் கொடுத்துள்ளனர். இது எவ்வாறு எப்படி சாத்தியமாகலாம்? என்பது எதிர்காலத்தில் தெரியவரும். அத்துடன் இப்பொழுது ஒன்ராறியோ HST (Harmonized Sales Tax) 13%ஆகக் காணப்படுகின்றது. GST (Goods and Sales Tax) 5% ஆகவும், PST (Provincial) (ஒன்ராறியோ) Sales Tax 8% ஆகவும் காணப்படுகின்றது.

கொரோனா காலத்தில் மத்திய அரசு கனடியர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றப் பலவிதமான சலுகைகளை அதிகமாக வழங்கியிருந்தது. இதனால் கனடிய அரசின் கடன் சுமை அதிகரித்துள்ளது. இதனால் HST 13% இலிருந்து 15%வரை அதிகரிக்கப்படலாம் எனக் கனடியர்கள் எதிர்பார்க்கின்றனர். புதிய வரவு செலவுத் திட்டத்தில் (மார்ச் 28, 2023) இதனைப்பற்றிய அறிவிப்புகள் தெரியப்படுத்தப்படுமா?

புதிதாகப் பெறப்படும் கடனை நீண்டகால மாறாத அடமானக் கடனை (Long Term Closed Mortgage) பெறுவதே சிறந்தது என அடமானக்கடன் பெற்றுக் கொடுக்கும் ஆலோகர்கள் தெரிவிக்கின்றனர்.

இரு வருடம் (2) அல்லது மூன்று வருடம் (3) மாறாத கடன் பெறுவது நல்லதாக லாம் எனவும் தெரிவிக்கின்றனர். இவ்வாறு தெரிவிப்பதற்குக் காரணமாகக் கூறுவது, கனடிய வட்டி வீதம் சிறிது காலம் மாறாமல் இருந்து பின்பே இறங்கத் தொடங்கலாம். அவ்வாறாயின் மாறுகின்ற வட்டி வீதத்தைவிட (Variable Mortgage Rate), மாறாதது அடமானக்கடன் (Closed Mortgage) சிறப்பாகலாம். எனினும், கடன் பெறுவோர் தமது பொருளாதார நிலைமைக்கு ஏற்ப, தகுந்த ஆலோசனையினைப் பெறுவது நல்ல தாகலாம்.

Canadian Bank Rate 4.5 %
Canadian Prime Rate 6.7%

2 years to 3 years closed mortgage rate (5.2% - 5.75%).

**FEBRUARY 2023 - GTA HOUSING MARKET STATS - BY REGION**

| HOUSE TYPES & AVERAGE SALE PRICE: | TORONTO | YORK | DURHAM | PEEL | HALTON |
|---|---|---|---|---|---|
| Average Sales Price | $1,071,043 | $1,302,720 | $888,448 | $1,032,286 | $1,222,095 |
| Detached | $1,712,364 | $1,667,608 | $986,652 | $1,347,653 | $1,531,195 |
| Semi-Detached | $1,150,506 | $1,280,380 | $772,729 | $962,332 | $1,046,840 |
| Townhouse | $1,330,019 | $1,183,480 | $871,737 | $917,016 | $1,016,320 |
| Condo Apt | $728,271 | $676,580 | $537,593 | $598,206 | $838,703 |
| Total # New Listings | 3,314 | 1,494 | 896 | 1,404 | 870 |
| Total # Active Listings | 4,110 | 1,663 | 777 | 1,589 | 983 |
| Total # Sales | 1,745 | 910 | 601 | 832 | 525 |
| Avg. Listing VS Property Days On Market (LDOM/PDOM) | 24/35 | 21/31 | 17/25 | 24/35 | 21/31 |
| YOY Avg. Price Change | -10% | -17% | -27% | -22% | -22% |

Prepared By: Sivage Sivagumaran BROKER CPA, CGA, GUILD™, ABR, SRES, SRS, RSPS | Source: TRREB Data As of, Mar/06/2023

## அக்கரையும் பச்சையில்லை



இக்கரை பச்சை இல்லை
அக்கரையும் பச்சை இல்லை
ஈழமண்ணில் பிறந்தவன் - நான்
இக்கரையில் வாழ்ந்தவன் வாழ்வில்
அக்கரையும் பார்த்தவன் - அதனால்
எம்மண்ணின் வரலாறு அது - நாம்
வளமிருந்தும் வாழ்வை மண்ணாக்கியவர்கள்
தரமிருந்தும் தரங்கெட்ட அரசியலைக் கொண்டவர்கள்
பொருளிலிருந்தும் பொருளாதாரத்தை கட்டி எழுப்பமுடியாதவர்கள்
போராட்ட வாழ்வில் புழுதியாய் போய் விட்டோம்.

மனித நேயம் மறுக்கப்பட்டவர்கள் நாம் - ஆகையால்
அக்கறை நாடி ஆவலோடு சென்றோம்
அம்மண்ணில் கால் பதித்தோம் அக்கரையும் பச்சையில்லை
கனடாவையும் கண்டோம். காட்டையும் (Credit Card) கண்டோம்.
காட் என்றால் கடன் - கடன் என்றால் காட்
கடன் இல்லாதோர் கனடாவில் இல்லை
நாளாந்தம் வேலை நல்லதோர் சாப்பாடு இல்லை.
அஃதில்லாதோர் வாழ்க்கையே வெற்றிடங்கள்
கடும்பனியில் செல்ல வேண்டும். ஆகையால் கார் வேண்டும்
'0' பேமன்ரில் வீடும் வாங்கலாம். சோபா செட்டும் வாங்கலாம்.
வாரத்தில் கிடைக்கும் வருமானத்தை வங்கியும் வட்டியுடன் வாங்கும்
காலை மாலை என கடும்பனியில் உழைத்திட வேண்டும்
மாதாந்த வாடகை மலையெனக் காட்சி
போதாக் குறைக்கு போன் பில்லும் வந்து சேரும்.

எம்மண்ணில் வாழ்ந்தாலும் எம்மவர் சளைப்பதில்லை
எத்தனை செலவானாலும் எல்லாமே நடத்திடுவர்
பூப்புனித நீராட்டு விழா என்ன பொங்கு தமிழ் நிகழ்வென்ன
கல்யாண வீடென்ன களை கட்டும் சாப்பாடு என்ன?
எல்லாமே சனிக்கிழமை ஏனென்றால் அதுவே நல்லநாள்
ஐயர் நாள் குறித்தால் அதுவும் சனிக்கிழமை தான்
ஆசை காட்டும் அரியதோர் பொக்கிஷங்கள் வங்கிகள்
படிப்பிக்கும் கடன்தரும் பட்ட கடன் அடைக்கவும் பணம்தரும்
வாழ்நாள் முழுவதும் கடனாளி என்ற பட்டம் தரும்
இக்கரை பச்சையில்லை என ஏங்கியவர்கள் நாம்
அக்கரையும் பச்சையில்லை என அறிந்து கொண்டோம்.

- தி. லோகநாதன் -



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# அப்பாவின்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

எனக்குத் தெரியாமல் தலையணைகளை நனைத்தாளோ தெரியாது, ஆனால் பெரிதாகக் கத்திக் குழறி அழவுமில்லை, எனக்கு முன்னால் தன் சோகத்தைக் காட்டிக் கொள்ளவுமில்லை.

குட்டிபோட்ட பூனைபோல அம்மா என்னைச் சுற்றிச்சுற்றி வரும்போது எதையோ மனதுக்குள் வைத்துக் குமைந்து கொண்டு வெளியே சொல்ல முடியாமல் சங்கடப்படுவதும், எதையோ என்னிடம் சொல்லத் துடிப்பதும் எனக்குப் புரிந்தது. அவளே சொல்லட்டும் என்று காத்திருந்து பொறுக்க முடியாமல் போகவே அம்மாவிடம் கேட்டேன்.

'ஏனம்மா கொஞ்ச நாளாய் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?'

'என்னுடைய மனசுக்குள்ளே அந்தக் குற்ற உணர்வு குடைஞ்சு கொண்டே இருக்குடி பாரதி!'

ஏனம்மா, அப்படி பீல்பண்ணுமளவிற்கு என்ன பெரிதாய் தப்புச் செய்திட்டாய், என்னவென்று என்னிடமாவது சொல்லேன்?'

'எப்படி உன்கிட்ட சொல்றது என்றுதான் எனக்குத் தயக்கமாக இருக்கிறது!'

'பரவாயில்லை, வேறுயார்கிட்ட சொல்ல முடியும்? என் கிட்டதானே, சொன்னா உனக்கு கொஞ்சம் மனசுக்கு ஆறுதலாய் இருக்குமேம்மா'

அம்மா கொஞ்ச நேரம் தயங்கினாள். எப்படித் தொடங்குவது என்றோ அல்லது தனது அந்தரங்கத்தை மகளுடன் எப்படிப் பகிர்ந்து கொள்ளவது என்றோ நினைத்திருக்கலாம்.

'வந்து.. அன்று அப்பா எங்களை விட்டுப் பிரிவதற்கு முதல் நாள் இரவு நான் ஒரு தப்புப்பண்ணிட்டேன்!'

'தப்பா? என்னம்மா சொல்லுறீங்க?'

'ஆமா..! படுக்கையிலே என்னை அவர் ஆசையோடு அணைக்க வந்தார், நான் கொஞ்சம் பிகு பண்ணிவிட்டேன். 'வயசுப் பெண்ணை வைத்துக்கொண்டு இப்போ இதெல்லாம் தேவையா?' என்று நான் வீம்போடு விலகிப் போய்விட்டேன். அவருக்கு ஏமாற்றமாய்ப் போய்விட்டது. அதன்பிறகு அவர் மறுபக்கம் திரும்பிப் படுத்திட்டார், என்கூடப் பேசவுமில்லை, ஊடல்தானே சரியாப்போயிடும் என்று நினைச்சு நானும் பேசாமல் இருந்திட டேன். இப்படியாகுமென்று எனக்குத் தெரியுமா? அதை நினைச்சா எனக்கு இப்பவும் ஒரே குற்ற உணர்வாய் இருக்கு.

அவருடைய கடைசி ஆசையைக்கூட நிறைவேற்ற முடியாத பாவியாய்ப் போய் விட்டேனடி நான்..!' ஒரு தோழியிடம் தன் குறையைச் சொல்வதுபோல என்னிடம் சொல்லி விம்மத் தொடங்கினாள் அம்மா.

'என்னம்மா, வேண்டும் என்றா இப்படிச் செய்தாய், யார் எதிர்பார்த்தா இப்படி எல்லாம் நடக்குமென்று, தற்செயலாக நடந்ததுதானே, உன்மேல தப்பே பயில்லையம்மா!'

'நான் பாவியடி..! அவர் என்கிட்ட தானே கேட்டார். புருஷன் என்ற உரிமையோடு தானே என்னிடம் கேட்டார்..!' தலையில் அடித்துக் கொண்டே ஒரு குழந்தைபோல என்தோளில் முகம் புதைத்துத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

'இப்படி எல்லாம் நடக்கும் என்று நீ நினைச்சியா அம்மா? நம்ம விதி அவ்வளவுதான், வேறு என்ன செய்ய முடியம்?' அம்மாவை அணைத்துக் கொண்டு சமாதானம் சொன்னேன்.

அவருடைய படத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவர் என்னுடைய காதுக்குள்ளே 'வார்த்தை தவறிவிட்டாய் கண்ணம்மா..!' என்று குற்றம் சாட்டுவது போல எனக்குள் ஒரே பிரமையாய் இருக்குதடி பாரதீ, அவரைக் கைபிடிக்கும் போது அக்கினி சாட்சியாய் இன்பத்திலும் துன்பத்திலும் அவருக்குத் துணையாய் இருப்பேன் என்றுதானே கைப்பிடித்தேன், நானொரு பைத்தியம், நிவர்த்தி செய்ய முடியாத தப்புப் பண்ணிட்டேனே என்று என்னுடைய மனச்சாட்சி எப்பொழுதும் என்னைக் குத்திக் காட்டிக் கொண்டிருக்குதே, நான் என்ன செய்ய..?' விசும்பல் விம்மலாக மாற அம்மா கத்தி அழத்தொடங்கினாள்.

'அழட்டும்! நெஞ்சில் உள்ள பாரத்தைக் கொட்டித் தீர்க்கும்வரை அழட்டும்!' என்று சிறிது நேரம் அம்மாவின் தலையை மெல்ல வருடி விட்டபடி காத்திருந்தேன். முடிந்தவரை அம்மாவிற்கு ஆறுதல் சொல்லிச் சமாதானப் படுத்தினேன். ஒரு மனநோயாளிபோல, பெற்ற மகளிடமே தன் அந்தரங்கத்தைச் சொல்லி அழுது தீர்க்கும் அளவிற்கு அம்மாவின் நிலை தாழ்ந்து விட்டதே என்பதை நினைத்த போது என்னையும் மீறி என் கண்கள் பனித்தன.

குடும்ப பொருளாதார நிலையை உத்தேசித்து நான் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குப் போகத் தீர்மானித்தேன். அம்மாவிடம் எனது முடிவைச் சொன்ன போது அம்மா அதை முற்றாக மறுத்து விட்டாள்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

ஆயிரக்கணக்கான தாதியர்கள், மருத்துவர்கள் மற்றும் தனிநபர் பராமரிப்புப் பணியாளர்களை ஒன்ராறியோ தற்போது பணிக்கமர்த்தி வருகின்றது.

இந்தப் பராமரிப்புடன் இணைவதற்கு நாம் உங்களுக்கு உதவும் அனைத்து வழிகளையும் ontario.ca/YourHealth இல் பார்வையிடவும்

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# நானிலம் போற்றும் நட்பு - 17



- அகணி -
authorakani@gmail.com

“ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார் கேண்மை ஒரீஇ விடல்” (அதிகாரம் நட்பாராய்தல், குறள் 797) என்ற குறளிற்கு “ஒருவனுக்கு ஊதியம் என்று சொல்லப் படுவது, அறிவில்லாதவருடன் செய்து கொண்ட நட்பிலிருந்து நீங்கி அவரைக் கைவிடுதலாகும்” என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“அறிவில்லாதவர் நட்பைவிட்டு விலகுவதே ஒருவனுக்கு உயர்வைத் தரும்” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

“அறிவற்றவர் சினேகத்தைக் கைவிடுவதே ஒருவனுக்கு இலாபமாகும்” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

அறிவில்லாதவர்களுடன் கொண்ட நட்பினை விட்டு விலகுவதால் நமக்கு நன்மையே ஏற்படும் என்று கூறி அறிவில்லாதவர் களுடன் உள்ள நட்புக் கூடாது என்ற அறிவுரையை இந்தக் குறள் வழங்குகிறது.

பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய ‘இன்னா நாற்பது’ என்ற நூலில் உள்ள நட்பு பற்றிய கருத்துகளை கவனிப்போம். இதனை இயற்றியவர் கபிலதேவர் அவர்கள். உரையாசிரியர் பாலசங்கரன் அவர்களின் உரையினைத் துணையாகக் கொண்டு ஆராய்வோம். இன்னா நாற்பது அறம் உரைப்பது. இன்னா நாற்பதில் கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்து களைக் கொண்டு, ஒவ்வொன்றையும் “இன்னா” என எடுத்துக் கூறுதலின் “இன்னா நாற்பது” எனப் பெயர்பெற்றது.

இன்னா நாற்பது _ பாடல் 8
“பகல் போலும் நெஞ்சத்தார் பண்பு இன்மை இன்னர்
நகை ஆய நண்பினார் நார் இன்மை இன்னர்
இகலின் எழுந்தவர் ஓட்டு இன்னர் இன்னா,
நயம் இல் மனத்தவர் நட்பு.”

“ஞாயிறு போலும் நெஞ்சத்தை உடையவர்கள் பண்பில்லாமல் இருத்தல் துன்பமாகும். நகுதலையுடைய நட்பினர் அன்பில்லாதிருத்தல் துன்பமாகும். போரிலே புறமுதுகிடுதல் துன்பமாகும். நீதியில்லாத மனத்தினை உடையவர்களது நட்பு துன்பமாகும்”

இந்தப் பாடலில் நீதியற்ற மனமுடைய வரின் நட்பு துன்பம் தரும் என்ற அறிவுரை உள்ளது.

இன்னா நாற்பது _ பாடல் 11
“உடம்பாடு இல்லாத மனைவி தோள் இன்னர்
இடன் இல் சிறியாரோடு யாத்த நண்பு இன்னர்
இடங்கழியாளர் தொடர்பு இன்னர் இன்னா,
கடன் உடையார் காணப் புகல்.”

“உள்ளம் பொருந்தாத மனைவியின் தோளினைச் சேர்தல் துன்பமாகும். விரிந்த உள்ளமில்லாத சிறுமையுடையாருடன் நட்பு கொள்ளுதல் துன்பமாகும். மிக்க காமத்தினை உடையாரது சேர்க்கை துன்பமாகும். கடன் கொடுத்தவரைக் காணச் செல்லுதல் துன்பமாம்.”





இந்தப் பாடலில் திறந்த மனப்பான்மை இல்லாத சிறுமை கொண்டோருடன் நட்பு கொள்வதால் துன்பம் ஏற்படும் என்ற அறிவுரை உள்ளது.

இன்னா நாற்பது _ பாடல் 25
“நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனி இன்னர்
ஒட்டார் பெருமிதம் காண்டல் பெரிது இன்னர்
கட்டு இலா மூதூர் உறைவு இன்னர் ஆங்கு இன்னா
நட்ட கவற்றினால் சூது.”

“நட்புக் கொண்டவர்களுடைய துன்பங் களைப் பார்ப்பது துன்பமாம். பகைவரது பெருமிதத்தைப் பார்ப்பது மிகவும் துன்ப மாகும். உறவினர் இல்லாத பழைய ஊரில் வாழ்தல் துன்பமாகும். அவ்வாறே சூதாடுவது துன்பமாகும்.”

இந்தப் பாடலில் நண்பர்களின் துன்பத்தைக் காண்பதும் துன்பம் தரும் என்ற அறிவுரை உள்ளது.

இன்னா நாற்பது _ பாடல் 26
“பெரியாரோடு யாத்த தொடர் விடுதல் இன்னர்
“அரியவை செய்தும்!” என உரைத்தல் இன்னர்
பரியார்க்குத் தாம் உற்ற கூற்று இன்னர் இன்னா,
பெரியார்க்குத் தீய செயல்.”

“பெரியவருடன் கொண்ட நட்பினை விடுதல் துன்பமாம். செய்தற்கரிய காரியங் களைச் செய்வோம் என்று கூறுவது துன்பமாம். அன்பு கொள்ளாதவர்களுக் குத் தாம் அடைந்த துன்பங்களைச் சொல்வது துன்பமாகும். பெருமையுடைய வர்களுக்குத் தீயவற்றைச் செய்தல் துன்பமாகும்.”

இந்தப் பாடலில் பெரியவர்களுடன் கொண்ட நட்பினைக் கைவிடுதல் துன்பம் தரும் என்ற அறிவுரை உள்ளது.

இன்னா நாற்பது _ பாடல் 32
“தன்னைத் தான் போற்றாது ஒழுகுதல் நன்கு இன்னர்
முன்னை உரையார் புறமொழிக் கூற்று இன்னர்
நன்மை இலாளர் தொடர்பு இன்னர் ஆங்கு இன்னா,
தொன்மை உடையார் கெடல்.

“தன்னைத்தானே காத்துக்கொள்ளாது இருத்தல் மிகவும் துன்பமாம். முன்னே சொல்லாமல் பின்னால் பேசுபவர்களின் சொல் மிகவும் துன்பமாம். நல்ல குணமில்லாதவரது நட்பு துன்பமாம். அவ்வாறே பழைமையுடையவர் கெடுதல் துன்பமாம்.”

இந்தப் பாடலில் நல்ல குணமில்லாதவர் களுடன் கொள்ளும் நட்பு துன்பம் தரும் என்ற அறிவுரை உள்ளது.

இன்னா நாற்பது _ பாடல் 36
“பொருள் இலான் வேளாண்மை காமுறுதல் இன்னர்
நெடு மாட நீள் நகர்க் கைத்து இன்மை இன்னர்
வரு மனை பார்த்திருந்து ஊண் இன்னர் இன்னா,
கெடும் இடம் கைவிடுவார் நட்பு.”

“செல்வமில்லாதவன் பிறருக்கு உதவி செய்ய ஆசைப்படுதல் துன்பமாம். நெடிய மாடங்களையுடைய பெரிய நகரத்தில் பொருள் இன்றி இருத்தல் மிகவும் துன்ப மாகும். சென்ற வீட்டில் உள்ளவரை எதிர் பார்த்து உணவு உண்ணுதல் துன்பமாம். வறுமையுள்ள இடத்தில் கை விட்டு நீங்குவாரது நட்பு துன்பத்தைத் தரும்.”

இந்தப் பாடலில் வறுமை என்ற காரணத்தைக் காட்டி நட்பினைக் கை விடுதல் துன்பம் தரும் என்ற அறிவுரை உள்ளது.

பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய ‘இனியவை நாற்பது’ என்ற நூலில் உள்ள நட்பு பற்றிய கருத்துக்களை கவனிப்போம்.

இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள நான்கு நாற்பது பாடல்களைக் கொண்ட நூல்களில் இரண்டாவதாகும். இதன் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார் எனப்படுவர். இந்நூலில் நான்கு இனிய பொருள்களை எடுத்துக் கூறும் பாடல்கள் நான்கே நான்கு தான் உள்ளன (1, 3, 4, 5). எஞ்சிய எல்லாம் மும்மூன்று இனிய பொருள்களையே சுட்டியுள்ளன. இவற்றில் எல்லாம் முன் இரண்டு அடிகளில் இரு பொருள்களும், பின் இரண்டு அடிகளில் ஒரு பொருளுமாக அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது. வாழ்க்கையில் நன்மை தரும் கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து “இனிது” என்ற தலைப்பிட்டு அமைத்திருப் பதால் இஃது “இனியவை நாற்பது” எனப்பட்டது. இதனை “இனிது நாற்பது”, “இனியது நாற்பது”, “இனிய நாற்பது” என்றும் உரைப்பர். உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையினைத் துணையாகக் கொண்டு ஆராய்வோம்.

இனியவை நாற்பது _ பாடல் 3
“ஏவது மாறா இளங் கிளைமை முன் இனிதே.
நாளும் நவை போகான் கற்றல் மிக இனிதே.
ஏருடையான் வேளாண்மைதான் இனிது. ஆங்கு இனிதே,
தேரின், கோள் நட்புத் திசைக்கு.”

“சொன்ன வேலைகளை மாற்றமில்லாமல் செய்யும் வேலைக்காரர்களைக் கொண்டி ருப்பது இனிதாகும். குற்றங்களில் ஈடு படாமல் கற்றல் மிக இனிதாகும். ஏரினை யும் உழவுமாடுகளையும் சொந்த மாக வைத்திருப்பவன் விவசாயம் செய்வது இனிது. அதுபோல ஆராயின் செல்லுந் திசையில் நட்புக்கொள்ளுதல் இனிது.”

இந்தப் பாடலில் நாம் செல்லுகின்ற திசையில் புதிய புதிய இடங்களில் நட்புக் கொள்ளுதல் இனிது என்ற அறிவுரை உள்ளது.

இனியவை நாற்பது _ பாடல் 17
“நட்டார்க்கு நல்ல செயல் இனிது எத்துணையும்
ஒட்டாரை ஒட்டிக் கொளல் அதனின் முன் இனிதே.
பற்பல தானியத்ததாகி, பலர் உடையும்
மெய்த் துணையும் சேரல் இனிது.”

“நட்டார் என்றால் நண்பர். நண்பர்களுக்கு இனியவற்றைச் செய்தல் இனிது. அதனை விட எள் அளவும் நட்பு இல்லாதவர்களை நண்பர்களாக்கிக் கொள்வது அதனைவிட இனியது. எல்லாவகைப் பொருட்களை உடையவராய் சமயத்தில் உதவும் நண்பர்களைத் துணையாக வைத்துக் கொள்வது இனிது.”

இந்தப் பாடலில் நாம் நண்பர்களுக்கு நல்லவற்றைச் செய்தல் இனிது. வேறு நண்பர்கள் இல்லாதவரை நண்பர்களாக் கிக் கொள்ளுதல் அதனைவிட இனியது. சமயத்தில் உதவும் நண்பர்களைத் துணையாக வைத்துக் கொள்வது இனிது போன்ற அறிவுரைகள் உள்ளன.

நீதி நூல்கள் சிலவற்றில் நட்பு பற்றிய அறிவுரைகளை இன்றும் ஆராய்ந்தோம். நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர் களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)



# ‘அயோத்தி’ சினிமா கதை சர்ச்சை: மாதவராஜ் கதையை திருடினாரா எஸ். ராமகிருஷ்ணன்?

**- கண்ணன் -**

தமிழ் சினிமாவில் மீண்டும் ஒரு கதை திருட்டு சர்ச்சை வெடித்திருக்கிறது. இந்த முறை குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருப்பவர் பிரபல எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன்!

நடிகர்கள் சசிகுமார், புகழ், போஸ் வெங்கட் நடிப்பில் அறிமுக இயக்குநர் மந்திரமூர்த்தி இயக்கத்தில் சமீபத்தில் வெளியாகியுள்ள படம் ‘அயோத்தி’. தமிழ் நாட்டு ரசிகர்களிடையே இப்படம் பரவலாக நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தப் படத்தின் கதை எஸ்.ராமகிருஷ்ணன் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், கதை தங்களுடையது என எழுத்தாளர்கள் நரன், மாதவராஜ், ராஜேஷ்குமார் மூவரும் குற்றஞ்சாட்டியுள்ளனர். இன்னொரு பக்கம் திரைக்கதை தன்னுடையது என படத்தின் இயக்குநர் மந்திரமூர்த்தி மீது திரைக்கதை ஆசிரியர் சங்கர்தாஸ் ஒரு குற்றச்சாட்டை வைத்துள்ளார்.

**அயோத்தி கதை என்ன? நரன், மாதவராஜ், சங்கரதாஸ், ராஜேஷ்குமார் குற்றச்சாட்டுகளுக்கு எஸ். ராமகிருஷ்ணன், இயக்குநர் பதில்கள் என்ன?**



ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

அயோத்தியைச் சேர்ந்த பல்ராம், அவரது மனைவி ஜானகி, மகள் ஷிவானி, மகன் சோனு ஆகியோர் புனித யாத்திரைக்காக ராமேஸ்வரம் வருகின்றனர். மதுரையில் இருந்து டாக்ஸியில் ராமேஸ்வரம் செல்கிறார்கள். பல்ராமின் அவசரத்தால் மோசமான விபத்து ஏற்படுகிறது. படுகாயமடையும் ஜானகி உயிரிழந்துவிட, மொழி தெரியாமல் தவிக்கும் அந்தக் குடும்பம் ஊர் திரும்ப, டாக்ஸி ஓட்டுநரின் நண்பர்களான அப்துல் மாலிக், பாண்டி (சசிகுமார், புகழ்) இருவரும் உதவுகிறனர். இதுதான் தற்போது வெளியாகியுள்ள ‘அயோத்தி’ படத்தின் கதை.

இனி சர்ச்சைக்கு வருவோம்.

முதலில் ‘அயோத்தி’ படத்தின் டீசர் வெளியானதுமே, எழுத்தாளர் நரன் இந்தப் படத்தின் கதை தன்னுடையது என ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார். தன்னுடைய ‘வாரணாசி’ என்ற சிறுகதையின் கதையை திருடி ‘அயோத்தி’ படத்தை எடுத்துள்ளனர் என்பது அவர் குற்றச்சாட்டு. ‘வாரணாசி’ சிறுகதை, ஒரு பெண் தன்னுடைய இறந்த கணவனின் உடலை தகனம் செய்ய வாரணாசிக்கு எடுத்து செல்லும் பயணத்தை சொல்கிறது.

இந்நிலையில், தற்போது படம் வெளியாகியுள்ளதை அடுத்து, எழுத்தாளர் மாதவராஜ் 2011இல் தான் எழுதிய ‘அழக்கூட திராணியற்றவர்களாய் அவர்கள்’ எனும் பதிவுதான் ‘அயோத்தி’ என்ற படமாக வந்துள்ளது என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது குறித்து ஃபேஸ்புக்கில் மாதவராஜ் எழுதியுள்ள பதிவில், ‘அயோத்தி’ திரைப்படம் யாருடைய ‘கதை’யும் அல்ல. ஓர் உண்மை நிகழ்வு. ராமேஸ்வரம் வந்த வட இந்தியக் குடும்பம் ஒன்று விபத்தில் சிக்கித் தவித்துப் போய் நின்றபோது எங்கள் சங்கத் தோழர்கள் சாமுவேல் ஜோதிக்குமாரும் சுரேஷ் பாபுவும் உதவினார்கள். அவர்கள் செய்த மனிதாபிமான உதவியை முதன்முதலில் செப்ரெம்பர் 2011இல் ஒரு கதைபோல எழுதி பதிவு செய்திருந்தேன். 2021இல் வெளி வந்த எனது ‘இரண்டாம் இதயம்’ புத்தகத்திலும் இந்தப் பதிவு இடம் பெற்றிருந்தது.

2011இல் நான் எழுதியது ‘அயோத்தி’ படத்தில் அப்படியே இருக்கிறது. ராமேஸ்வரம் வந்த வடநாட்டு குடும்பம் கார் விபத்தில் சிக்குவது, அந்தக் குழந்தைகளின் அம்மா இறந்து போவது, நிலமும் மொழியும் வேறான மதுரையில்

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)





மகுடம்
MAHUDAM 2023
ESTD 1994
KOKUVIL HINDU COLLEGE O.S.A. CANADA
2300 PHARMACY AVE,
SCARBOROUGH, ON M1W 1H8
MARCH 25TH SATURDAY
2023 5:00PM
மாபெரும் இன்னிசை, நடன நிகழ்வு
Singers
Punya
Mahisha
Hariharasudhan
Ananthan
DANCE PERFORMER'S
Irudaya Dance Company
Abinayalaya Natyalayam &
Sri Abiramy Dance Academy
Mega Tunes
MC
Prasanth
&
Sai Janani
KOKUVIL HINDU COLLEGE OSA CANADA
Tickets are available Contact:
Ravi Kana - 416 725 7284, Maithily- 416 388 3935
Nageswaran - 647 609 5392
CHRISTEEN SEEVARATNAM
S.P.IMPORTERS
OPTIMART
WINNERS LOTTO CENTRE
NEW OCEAN
INDRAN SWEETS
BUY, SELL & LEASE
Brooklin
PARTY PERFECTION
FOR PRIVATE EVENTS
RAJA MAHENDRAN
RE/MAX
SINDI FINANCIAL
HOMELIFE
TEMPLE OF SAREES
Reliable
RANJANTHIRU LAW
416 301 1733




## நீண்ட தூர நெடுஞ்சாலை AZ டிரைவர் தேவை !!

அணிகள் மட்டும்**
பாதைகள் NB-ON-US-ON*
பாதைகள் US மத்திய மேற்கு & கிழக்கு கடற்பரப்பு
(NC, SC, GA, FL, TX, AR, MO, ID, KY, VA, PA, NJ, WI, IL, NE, MN)

✓ $2500 கையொப்பம் போனஸ்*
✓ $500 பரிந்துரை போனஸ்*
✓ அனுபவத்தைப் பொறுத்து ஒரு மைலுக்கு $0.70 வரை சம்பாதிக்கலாம்.
✓ 6-8 நாட்கள் வெளியே தங்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
✓ குறைந்தபட்ச வாராந்திர ஊதியம் $2200 முதல் $2500 வரை சம்பாதிக்கலாம்.
✓ தானியங்கி டிரக் புதிய மாடல்கள்; Freighliner & Volvo
✓ பிரத்யேக பாதைகள்.
✓ உங்கள் அரை மாத வருமானத்தை நாங்கள் நேரடியாக உங்கள் வங்கியில் டெபாசிட் செய்கிறோம்.

**குறைந்தபட்ச தேவைகள்:**

✓ AZ உரிமம் தேவை
✓ 6 மாதங்கள் சரிபார்க்கக்கூடிய அனுபவம்
